[1995 ஏப்ரல் 24

418—

குறிஞ்சிப்பாடி தொகுதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்குதல்

* **33157**—திரு. கு. *சிவசுப்பிரமணியன்:*

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, சோரிகுப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியைப் பிரித்து ஆபத்தாரணபுரம், வடகுத்து ஆகிய பகுதிக்கு தனியே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிஞ்சிப்பாடி தொகுதி சோரிகுப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியைப் பிரித்து ஆபத்தாரணபுரம், வடகுத்து ஆகிய பகுதிகளுக்குத் தனியே ஒரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தொடங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் கூட்டுறவுத் துறை அமைச்சகத்தின் மூலமாக மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி மட்டுமல்ல, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக நகைக் கடன் போன்றவற்றை வழங்கி, இன்றைக்கு விவசாயிகளுடைய வாழ்விலே ஒளி ஏற்றிவைத்து, தனியாரிடம் நகைகளை அடகு வைத்து அவை மூழ்கிவிடும் நிலையும், கடன் பெற்று நிலங்களை அவர்களிடம் பறி கொடுக்கும் நிலையும், மாறி, இன்றைக்கு நல்ல முறையில் விவசாயிகள் விவசாயம் செய்து, ஏற்றமடைந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் வாழ்விலே ஒளி ஏற்றிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய வடலூர் பகுதியில் இருக்கின்ற சோரிகுப்பம் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி ஆபத்தாரணபுரம், வடகுத்து ஆகிய இரண்டு பெரிய ஊர்களுக்கும் சேர்த்து இயங்கிக் கொண்டிருக்கிறது. 2 ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தேர்தல் நடைபெற்றபோது அங்கே பெரிய தகராறே நடந்தது. ஆபத்தாரணபுரம் என்பது நான் பிறந்த ஊர். ஆகவே இதைத் தனியாகப் பிரிப்ப தற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்ற காரணத்தால்—அந்தத் துறையினுடைய அமைச்சரவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கக்கூடியவர்கள். இன்றைக்கு அந்தத் துறை நல்ல மேம்பாடு அடைந்திருக்கிறது. அதற்கு அவரும் ஒரு

1995 ஏப்ரல் 24]

காரணமாக இருந்திருக்கிறார்கள். ஆகவே—புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இதைச் செய்துதர முன் வருவார்களா, மீண்டும் பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்காலத்திலேதான் எந்தெந்த இடங்களிலே துவக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை இரண்டாகப் பிரித்து அங்கே வாழ்கிற மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்களை செய்துகொண்டிருக்கிறோம். அந்த வகையிலே பார்க்கிறபோது, சோரிக்குப்பம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது சோரிக்குப்பத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, சொந்தக் கட்டிடத்திலே இயங்கிவருகிறது. இந்த வங்கிக்குட்பட்ட எல்லையில் சோரிக்குப்பம், ஆபத்தாரணபுரம், வடகுத்து, வடக்கு மேலூர் என்ற நான்கு கிராமங்கள் மட்டுமே இந்த வங்கியிலே இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்த கிராமங்களின் மொத்த மக்கள் தொகை 16,158. இந்த வங்கியிலே 1920 பேர்தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த நிலையில் மேலும் அங்கே மக்களுக்கு வசதி செய்து தரவேண்டுமானால் மக்கள் தொகை இன்னும் அதிகமாக இருக்கவேண்டும், அல்லது லேவாதேவிகள் அந்த வங்கியிலே அதிகமாக நடைபெறவேண்டும். கடன் கேட்கிற மக்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கவேண்டும். அப்படியெல்லாம் பார்க்கிறபோது, இந்த நான்கு கிராமங்களின் மக்கள் மட்டுமே அந்த வங்கியிலே லேவாதேவி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அந்த வங்கியை இரண்டாகப் பிரித்து உருவாக்க வேண்டுமானால் தாய் வங்கியும் தன்னுடைய செயல்பாட்டை இழந்துவிடக்கூடிய் அந்த நிலைமையில் இருக்கிறது. ஆகவே இந்த வங்கியை இரண்டாகப் பிரிக்கின்ற எண்ணம் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு என்ற வார்த்தையே, கூட்டு பிளஸ் உறவு என்பதாகும். இதிலேயிருந்து நாம் உணர்ந்து கொள்வது என்னவென்றால் கூட்டு மட்டும் இருந்தால் போதாது, உறவு சரியாக இல்லையென்றால் அது உணர்வு பூர்வமாக அமையாது என்பதுதான். இது எந்த நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டதோ அந்த நோக்கத்தையும் அடைய முடியாமல் போய்விடும். இது அரசியலுக்கும்

பொருந்தும், கூட்டுறவுத்துறைக்கும் பொருந்தும். ஆகவே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு எங்களுடைய கிராமத்தில் இருக்கின்ற பிரச்சினையை மனதில் கொண்டு, அவர்கள் கூறியிருக்கிற அந்த தகுதிகளை நாங்கள் உருவாக்கிக் கொடுத்தால் அதை மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: அப்படியொரு புதிய நிலைமை உருவாக்கப்படுமானால் இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டு, உறவு என்பது அரசியலுக்கும் பொருந்தும் என்று சொன்னார்கள். இன்றைக்குத் தமிழகத்தினுடைய அரசியலைப் பார்க்கின்றபோது இந்தக் கூட்டுறவை வைத்துக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு முதுகில் குத்துகின்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கூட்டுறவை இந்தக் கூட்டுறவுத்துறை எதிர்பார்க்கவில்லை. கூட்டுறவு என்பது கூப்பிட்டு உறவை வைத்துக்கொள்கிற நிலையாகும் - அவர்கள் ஒழுங்காக இருப்பார்களானால்—என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 419, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

419—

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குதல்

***23813**—*திரு. என். ஆர். ராஜேந்திரன்:*

மாண்புமிகு ஆதிதிரவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில் தொகுதி, அண்ணாமலை நகரியம் கொத்தங்குடி தோப்பு மற்றும் திருவேட்களம் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேவையான நிலம் கையகம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்நடவடிக்கைகள் முடிவுற்றதும் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும்.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இனிமையான பதிலைத் தந்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பெல்லாம் வீட்டு மனைப்பட்டா வழங்குவது